**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022 ம் வருடம் ஜீன் திங்கள் 27 ம் நாள் திங்கள்கிழமை</u>

**<u>அ.வ.எண்.372/2016 இல் இ.ம.எண்.03/2022</u>**

பொள்ளாச்சி தாலூக்கா, பொள்ளாச்சி டவுன், குப்பாண்டர் தெரு, கதவு எண்.35 என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.நடராஜன் மகன் சுமார் 61 வயதுள்ள திரு.நாச்சிமுத்து.

... மனுதாரர் / வாதி

/ எதிர் /

1. பொள்ளாச்சி தாலூக்கா, பொள்ளாச்சி டவுன், குப்பாண்டர் தெரு, கதவு எண்.51/3A என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.அப்புசாமி மகன் சுமார் 42 வயதுள்ள திரு.A.செல்வராஜ்.

2. பொள்ளாச்சி தாலூக்கா, பொள்ளாச்சி டவுன், குப்பாண்டர் தெரு, கதவு எண்.51/3A என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.A.செல்வராஜ் மனைவி சுமார் 39 வயதுள்ள திருமதி.அகிலாண்டீஸ்வரி.

3. ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி, பொள்ளாச்சி.

4. நகரமைப்பு அலுவலர், பொள்ளாச்சி நகராட்சி, பொள்ளாச்சி.

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது, நில அளவையர் உதவியுடன் மனுச்சொத்தை பார்வையிட்டு, அளவீடு செய்து அதன் இயற்பியல் தன்மை மற்றும் அளவுகள் குறித்து ஆராய்ந்தும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு விரோதமாக கட்டுமானம் செய்து தாவா சொத்திற்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் குறித்தும், பொதுத்தடத்தில் செய்துள்ள தடைகள் குறித்தும் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 24.02.2022

இம்மனுவானது கடந்த 25.04.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மகாதேவன் அவர்கள் முன்னிலையாகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் / 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.மருதராஜ் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும். இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

<u>**இறுதி உத்தரவு**</u>

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் **திரு.S.ராஜா முகமது, M/s.1857/2014** அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினர்களுக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்த பின்னர் இரு தரப்பினர்கள் முன்னிலையில் இரு தரப்பு உரிமை மூல ஆவணங்களின் அடிப்படையிலும், வருவாய் ஆவணங்களின் அடிப்படையிலும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வரைபட அனுமதி அடிப்படையிலும், மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்டதாக கூறப்படும் சொத்தினையும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக கூறப்படும் சொத்தினையும் அளவையர் உதவியுடன் அளவீடு செய்து அதன் இயற்பியல் தன்மை குறித்து பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.10,000/−ம் நிர்ணயம் |

| | |
|---|---|
| | செய்யப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற ஆணையருக்குண்டான கட்டணத்தை மனுதாரர் / வாதி நேரடியாக நீதிமன்ற ஆணையர் வசம் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br>மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2002(5)CTC 104 என்ற சட்ட இதழில் பிரசுரம் ஆகியுள்ள ருக்மணி மற்றும் நால்வர் எதிர் A.S.சின்னையா என்ற வழக்கில் தீர்மானித்துள்ளவாறு வட்டாட்சியர் மற்றும் நில அளவையர் ஆகியோருக்கு நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை ஸ்தல ஆய்வு செய்வது குறித்து அறிவிப்பு அனுப்புவதற்காக, நில அளவையர் தாவா சொத்தினை அளவீடு செய்ய உகந்த தேதியை இருதரப்பு வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற ஆணையரிடம் கேட்டு நிர்ணயம் செய்வதற்கும், நீதிமன்ற ஆணையரின் ஊதியத்தை செலுத்துவதற்கும் அழைக்க<br>வாய்தா : 14.07.2022 |

**PETITION MENTIONED PROPERTY**

**அயிட்டம் 1 :**

கோவை ரிடிடு பொள்ளாச்சி ரிசப்டி கஸ்பா பொள்ளாச்சி முனிசிபல் டவுனில் டவுன் சர்வே வார்டு 4, முனிசிபல் வார்டு 20, குப்பாண்டக்கவுண்டர் வீதியில் டி.எஸ்.நெ. 704 க்கு 417 சதுரடியும், டி.எஸ்.நெ. 705 க்கு 978 சதுரடியும், டி.எஸ்.நெ. 702 க்கு 2977 சதுரடியும் ஆக 4372 சதுரடி நிலத்தில் கிழபுறம் தென்வடலாக கிழமேல் குப்பாண்டக்கவுண்டர் வீதிக்கும் தெற்கு, டி.எஸ்.நெ.713 நெ. பொன்னாஞ்செட்டியார் வீட்டுக்கும் பிறவடைக்கும் மேற்கு கிணர் பாகத்துக்கும் கிணத்தடி நிலத்துக்கும் வடபுறத்தில் சுவர் உள்பட 3½ அடி அகலமுள்ள கிழமேல் பொது தடத்துக்கும் வடக்கு டி.எஸ்.நெ. 702, 704, 703 நெம்பர்களிலும் ஷண்முகசுந்தரம் செட்டியார் பாக பிறவடை இடத்துக்கும் கொட்டத்துக்கும் மத்திய ரூமுக்கும் திண்ணைக்கும் முன்வாசலுக்கும் கிழக்கு

இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 40, தென்புறம் கிழமேலடி 40, இதற்கு தொடர்ச்சியாக தென்புறம் கிழமேலடி 33, தெற்கோடு கிழமேல் பொது தடத்துக்கும் கிணத்தடி நிலத்துக்கும் கிணற்றுக்கும் வடபுறமாக கிழமேலடி 30'9" கிழபுறம் தென்வடலடி 66, மேல்புறம் தென்வடலடி 66 இந்த அளவுள்ள இடத்தில் மேல்புறம் தென்வடலாக சரிபாதி வடபுறம் கிழமேலடி 20, தென்புறம் கிழமேலடி 20 இதற்கு தொடர்ச்சியாக தென்புறம் கிழமேலடி 16½ , தெற்கோடு கிழமேலடி 15' 4½ " தென்வடலடி மேல்புறமும் கிழபுறமும் 66. இந்த அளவுள்ள இடமும் இதிலுள்ள வடக்கு வாசல் வில்லை வீடும் மேற்படி வீட்டுக்குச் சேர்ந்த கொட்டமும் மத்திய ரூமும் அதை ஒட்டியுள்ள சமையல் ரூமும் மற்றொரு ரூமும் திண்ணையும் முன்வாசல் இடமும் பின்புறமுள்ள கொட்டமும் பிறவடை இடமும் மேற்படி வீட்டுக்குச் சேர்ந்த கதவு நிலவு கட்டுக்கோப்பு காம்பவுண்டு சுவரும் மத்திய ரூமில் மேல்புறம் தென்வடல் சுவற்றில் பாதி சுவரும் கிழமேல் பொது தடத்தின் வழியாய் போய் தென்கிழக்கு பாகத்திலுள்ள மேல்புறம் பாதி சேந்து கிணத்தில் தென்புறம் அதாவது கால் பாகம் 6 x 7 = 42 சதுரடி நிலத்திலுள்ள சேந்து கிணத்தில் தண்ணீர் இறைத்துக் கொள்ளும் பாத்தியமும் கிணத்தடி நிலத்தை உபயோகித்துக் கொள்ளும் பாத்தியமும் எலெக்ட்டிரிக் லைட் முனிசிபல் தண்ணீர் குழாயும் இந்த சொத்து முனிசிபல் பழைய கதவு நெ. 29. தற்போதைய கதவு நெ. 35 சாதா கக்கூஸ் 1. இது டி.எஸ்.வார்டு 4 டி.எஸ். நெம்பர் 702, 704, 705 இவைகளில் ஓர்பாகம் எலெக்ட்டிரிக் லைட் எஸ்.சி.நெ. 1214 தண்ணீர் குழாய் எஸ்.சி.நெ. 2143 மேற்படி எல்லா சொத்துக்களிலும் மேல்புறம் சரிபாதி சொத்துக்கள் ஒரு சண்முகசுந்தரம் செட்டியார் பாக சொத்துக்கு மேல்புறமாயும் டி.எஸ்.701, டி.எஸ்.நெ. 702 நெ. வீட்டுக்கும் வீட்டு முன்வாசலுக்கும் கொட்டத்துக்கும் கிழபுறமாயும், குப்பாண்டக்கவுண்டர் வீதியிலிருந்து தென்புறமாக விடப்பட்டுள்ள 2½ அடி அகலமுள்ள தென்வடல் பொது தடத்தின் வழியாயும் தெற்கோட்டு காம்பவுண்டு சுவற்றுக்கு வடபுறமாக

தடத்தின் அகலம் சுவர் உள்பட 3½ அடி அகல கிழமேல் பொது தடத்தின் வழியாகவும், குப்பாண்டக்கவுண்டர் வீதிக்கு இந்த பாகஸ்தரும் இந்த பாகஸ்தரின் வாரிசுகளும் நடந்து கொள்ளும் தட பாத்தியமும் உண்டு.

**<u>அயிட்டம் 2 :–</u>**

கோவை ரிடிடு பொள்ளாச்சி ரிசப்டி கஸ்பா பொள்ளாச்சி முனிசிபல் டவுனில் டவுன் சர்வே வார்டு 4, முனிசிபல் வார்டு 20, குப்பாண்டக்கவுண்டர் வீதியில் டி.எஸ்.நெ. 704 க்கு 417 சதுரடியும், டி.எஸ்.நெ. 705 க்கு 978 சதுரடியும், டி.எஸ்.நெ. 702 க்கு 2977 சதுரடியும் ஆக 4372 சதுரடி நிலத்தில் கிழபுறம் தென்வடலாக கிழமேல் குப்பாண்டக்கவுண்டர் வீதிக்கும் தெற்கு, டி.எஸ்.நெ.713 நெ. பொன்னாஞ்செட்டியார் வீட்டுக்கும் பிறவடைக்கும் மேற்கு கிணர் பாகத்துக்கும் கிணத்தடி நிலத்துக்கும் வடபுறத்தில் சுவர் உள்பட 3½ அடி அகலமுள்ள கிழமேல் பொது தடத்துக்கும் வடக்கு டி.எஸ்.நெ. 702, 704, 703 நெம்பர்களிலும் ஷண்முகசுந்தரம் செட்டியார் பாக பிறவடை இடத்துக்கும் கொட்டத்துக்கும் மத்திய ரூமுக்கும் திண்ணைக்கும் முன்வாசலுக்கும் கிழக்கு இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 40, தென்புறம் கிழமேலடி 40, இதற்கு தொடர்ச்சியாக தென்புறம் கிழமேலடி 33, தெற்கோடு கிழமேல் பொது தடத்துக்கும் கிணத்தடி நிலத்துக்கும் கிணற்றுக்கும் வடபுறமாக கிழமேலடி 30'9" கிழபுறம் தென்வடலடி 66, மேல்புறம் தென்வடலடி 66 இந்த அளவுள்ள இடத்தில் மேல்புறம் தென்வடலாக சரிபாதி வடபுறம் கிழமேலடி 20, தென்புறம் கிழமேலடி 20 இதற்கு தொடர்ச்சியாக தென்புறம் கிழமேலடி 16½ , தெற்கோடு கிழமேலடி 15' 4½ " தென்வடலடி மேல்புறமும் கிழபுறமும் 66. இந்த அளவுள்ள இடமும் இதிலுள்ள வடக்கு வாசல் வில்லை வீடும் மேற்படி வீட்டுக்குச் சேர்ந்த கொட்டமும் மத்திய ரூமும் அதை ஒட்டியுள்ள சமையல் ரூமும் மற்றொரு ரூமும் திண்ணையும் முன்வாசல் இடமும் பின்புறமுள்ள கொட்டமும் பிறவடை இடமும் மேற்படி வீட்டுக்குச் சேர்ந்த கதவு நிலவு கட்டுக்கோப்பு காம்பவுண்டு சுவரும்

மத்திய ரூமில் மேல்புறம் தென்வடல் சுவற்றில் பாதி சுவரும் கிழமேல் பொது தடத்தின் வழியாய் போய் தென்கிழக்கு பாகத்திலுள்ள மேல்புறம் பாதி சேந்து கிணத்தில் தென்புறம் அதாவது கால் பாகம் 6 x 7 = 42 சதுரடி நிலத்திலுள்ள சேந்து கிணத்தில் தண்ணீர் இறைத்துக் கொள்ளும் பாத்தியமும் கிணத்தடி நிலத்தை உபயோகித்துக் கொள்ளும் பாத்தியமும் எலெக்ட்டிரிக் லைட் முனிசிபல் தண்ணீர் குழாயும் இந்த சொத்து முனிசிபல் பழைய கதவு நெ. 29. தற்போதைய கதவு நெ. 35 சாதா கக்கூஸ் 1. இது டி.எஸ்.வார்டு 4 டி.எஸ். நெம்பர் 702, 704, 705 இவைகளில் ஓர்பாகம் எலெக்ட்டிரிக் லைட் எஸ்.சி.நெ. 1214 தண்ணீர் குழாய் எஸ்.சி.நெ. 2143 மேற்படி எல்லா சொத்துக்களிலும் கிழபுறம் சரிபாதி சொத்துக்கள் ஒரு சண்முகசுந்தரம் செட்டியார் பாக சொத்துக்கு மேல்புறமாயும் டி.எஸ்.701, டி.எஸ்.நெ. 702 நெ. வீட்டுக்கும் வீட்டு முன்வாசலுக்கும் கொட்டத்துக்கும் கிழபுறமாயும், குப்பாண்டக்கவுண்டர் வீதியிலிருந்து தென்புறமாக விடப்பட்டுள்ள 2½ அடி அகலமுள்ள தென்வடல் பொது தடத்தின் வழியாயும் தெற்கோட்டு காம்பவுண்டு சுவற்றுக்கு வடபுறமாக தடத்தின் அகலம் சுவர் உள்பட 3½ அடி அகல கிழமேல் பொது தடத்தின் வழியாகவும், குப்பாண்டக்கவுண்டர் வீதிக்கு இந்த பாகஸ்தரும் இந்த பாகஸ்தரின் வாரிசுகளும் நடந்து கொள்ளும் தட பாத்தியமும் உண்டு.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் ஜீன் மாதம் 27ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**இறுதி உத்தரவு**
அ.வ.எண்.372/2016 இல் இ.ம.எண்.03/2022
நாள் : 27.06.2022
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---